காலை முரசு

பக்கங்கள்:-21

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஆவணி 05 | வியாழக்கிழமை | 21.08.2025 | அதிர்வு 20


## நல்லூர் கந்தசுவாமிக்கு இன்று தேர்த்திருவிழா



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற யாழ்.நல்லூர் கந்தசுவாமிஆலயத்தில் இன்று தேர்த் திருவிழா நடை 04

# சப்பை ரதமேறி அருள் பாலித்த நல்லூரான்

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற யாழ். நல்லூர் கந்தசுவாமி ஆலயப் பெருந்திருவிழாவில் நேற்று மாலை முருகப் பெருமான் சப்பை ரதமேறி பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

(மேலும் படங்கள் 2, 3 ஆம் பக்கங்களில்)




# வடக்கு - கிழக்கு ஊடகர்களை அச்சுறுத்துவதை உடன் நிறுத்து!

## கொழும்பில் நாளை பெரும் போராட்டம்

"குமணனை அச்சுறுத்துவதை நிறுத்து!, வடக்கு - கிழக்கு ஊடகவியலாளர்களை அச்சுறுத்துவதை நிறுத்து!!" எனக் கோரி ஊடக ஊழியர் தொழிற்சங்கச் சம்மேளனம் மற்றும் இளம் ஊடகவியலாளர் சங்கம் என்பன ஒன்றிணைந்து தலைநகர் கொழும்பில் மாபெரும் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளன.

நாடாளுமன்றச் சுற்று வட்டத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. 04








மாகாண சபைக்குப் பகிரப்பட்ட அதிகாரமான மன்னார் மாவட்ட வைத்தியசாலையை மத்திய அரசு திரும்பவும் தனது அதிகாரத்துக்குள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அரசியல் நிலைமை புரியாமல் ஜனாதிபதி மட்டம் வரை விடயத்தைக் கொண்டு சென்ற மன்னார் ஆயர் குறித்து தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் கடும் விமர்சனங்கள் கிளம்பி உள்ளன.

தமிழர்களின் தேசியப் போராட்டத்திற்காக தனது கடைசி உயிர் மூச்சு வரை துணிச்சலுடன் செயலாற்றிய முன்னாள் ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகையின் மதப் பதவி நிலையில் அமர்ந்து கொண்டு இப்படி தமிழ் தேசிய அரசியலுக்கு எதிராகத் தற்போதைய மன்னார் ஆயர் வெளியிட்ட கருத்து தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் கடும் விமர்சனத்திற்கும் எதிர்ப்புக்கும் உள்ளாகி உள்ளது.


இந்த விடயத்தில் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசிய மன்னார் ஆயர் அது பற்றிய விடயங்களை தாம் நேரடியாக ஊடகங்களுக்குத் 04

# சப்பை ரதமேறி அருள் பாலித்த நல்லூரான்








# சப்பை ரதமேறி அருள் பாலித்த நல்லூரான்


















# உப்பின் விலை குறைப்பு



நாட்டில் அயடின் கலந்த லக் உப்பின் விலையை லங்கா உப்பு நிறுவனம் குறைத்துள்ளதாக அந்த நிறுவனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

அதன்படி, 400 கிராம் அயடின் கலந்த உப்பு தூள் பையின் விலை 20 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோகிராம் அயடின் கலந்த உப்பு தூள் பையின் விலை 30 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளது.

அதன்படி, அடுத்த வாரம் முதல் 400 கிராம் உப்பு தூள் பை ஒன்று 100 ரூபாவுக்கும், ஒரு கிலோ கிராம் உப்பு தூள் பை 200 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படவுள்ளது.

அத்துடன், ஒரு கிலோகிராம் கட்டி உப்பு பை, 150 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படும் என அந்த நிறுவனத்தின் தலைவர் அறிவித்துள்ளார்.

# யாழில் ஆலயங்களில் நகைத் திருட்டில் ஈடுபட்ட எட்டு பெண்கள் சிக்கினார்கள்!

யாழ்ப்பாணத்தில் ஆலயங்களில் தங்க நகை திருட்டில் ஈடுபட்டு வந்த 8 பெண்கள் கொண்ட குழுவை யாழ். பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதான பெண்களில் இருவர் இந்தியாவில் இருந்து வந்தவர்கள் என்று தெரியவந்துள்ளது.

கைதான குழு நல்லூர் கந்தசுவாமி ஆலயம், மடுமாதா தேவாலயத்திருவிழாக்களை இலக்குவைத்தே வடக்குக்கு வந்துள்ளனர் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

ஆலயத் திருவிழாக்களில் பொதுவாக வடக்கில் பெண்கள் அதிகளவில் தங்க நகைகளை அணிந்து வருவது வழமை. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியே மேற்படி குழு நகைக் களவில் ஈடுபட்டது என்றும் தெரியவந்துள்ளது.

மேலும், மடுமாதாதேவாலயத்திருவிழாவில் 10 இற்கும் மேற்பட்ட பெண்களின் தங்க நகைகள் களவாடப்பட்டன. இவற்றின் பெறுமதி சுமார் 75 இலட்சம் ரூபாயிலும் அதிகமாகும்.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஆண்கள் இருவரும் பெண்கள் நால்வரும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

யாழ்ப்பாணத்தில் கைதான பெண்கள் குழுவுக்கும் மடுவில் கைதான பெண்கள் குழுவுக்கும் தொடர்பு உள்ளது என்றும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் இந்தியப் பெண்களுடன் கைதானவர்கள் குறி சொல்லும் தொழிலில் ஈடுபடுபவர்கள். அவர்கள் சிலாபம், தம்புதேகம பகுதிகளில் வசிப்பவர்கள் என்றும் தெரியவந்துள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவிக்காமல் குரு முதல்வர் மூலம் விடயங்களை வெளிப்படுத்தி இருக்கிறார்.

அவரது பதவி நிலை இப்போது பொது மக்களுடன் நேரடியாக சம்பந்தப்படுகின்ற பல பொது விடயங்களுடன் தொடர்பாடல் படுவதால் அவர் விவகாரங்களில் ஊடகங்களை நேரடியாக சந்தித்து கருத்து வெளியிட வேண்டிய பதவியில் இருக்கின்றார் என்பதை மறக்காமல் இருப்பது நல்லது.

ஏற்கனவே அவரது தலைமையில் அல்லது வழிகாட்டலில் முன்னெடுக்கப்பட்டு இப்போது தீவிரமாக தொடர்கின்ற மன்னார் காற்றாலை மற்றும் கனிய மணல் அகழ்வுக்கு எதிரான போராட்டம் இப்போது அதிதீவிர கட்டத்தை அடைந்திருக்கின்றது. அது தொடர்பாக ஜனாதிபதி பேச்சு நடத்தி ஒரு மாத கால அவகாசம் எட்டப்பட்டு இருக்கும் நிலையில், அந்தக் காலகட்டத்தில் கூட அந்தப் போராட்டத்தை இடைநிறுத்தாமல் தொடருவது என்று அதனைக் கொதிநிலைக்குத் தள்ளிவிட்டு, அந்த விவகாரம் உச்சக்கட்டத்தை அடையும் சூழ்நிலையில் மன்னார் ஆயர் அடுத்த பல வாரங்களுக்கு இங்கு நிற்க மாட்டார் என்று செய்தி வெளியாகி இருக்கின்றது. இந்த முக்கிய காலகட்டத்தில் மன்னார் போராட்டத்தை வழிநடத்த வேண்டிய 'மேய்ப்பர்' மற்றோரிடம் அதை விட்டு விட்டு அவர் பிரான்ஸுக்குப் புறப்பட்டு விட்டார் என்றும் தகவல்.

அண்மையில் கூட மடு திருப்பதி உற்சவ சமயத்தில் ஹர்த்தால் நிகழ்வை அறிவித்துவிட்டார் என்று இலங்கை தமிழரசு கட்சியின் பொதுச்செயலாளர் சுமந்திரன் மீது சீற்றம் கொண்டு அவரை அது குறித்து பேசுவதற்காக மடுவுக்கு அழைத்துவிட்டு, சந்திக்காமல் புறமொதுக்கி, தமது குரு முதல்வரோடு பேசும்படி மன்னார் ஆயர் விட்டேத்தியாக நடந்து கொண்டார் என்று தகவல் உண்டு.

ஏற்கனவே திருக்கேதீஸ்வரம் தொடர்பான வழக்கில் இந்துக்களுக்கு ஆதரவாக சுமந்திரன் முன்னிலையாகி வாதாடுகின்றார் என்ற சீற்றம் அவருக்கு இருக்கலாம்.

இப்போது மன்னாரில் மக்கள் போராட்டம் அவரது கிறிஸ்தவ திருச்சபையின் பின்புலத்தில் தீவிரமடைந்திருக்கிறது. தினசரி போராட்டத்தில் பங்குபற்றும் பொறுப்பு அவரது திருச்சபையின் கீழ் உள்ள பங்குகளுக்கு பங்கிட்டு கொடுத்து முன்னெடுக்கப்படுவதாகவும்கூறப்படுகின்றது. அத்தகைய போராட்டம் ஓர் இக்கட்டான கொதிநிலைக் கட்டத்தை அடைந்திருக்கும் இந்தச் சூழலில் அவர் மன்னாரில் இருந்து அதனை வழிகாட்டுவதை விடுத்து, பொறுத்த கட்டத்தில் வெளிநாட்டுக்கு போகின்றமை குறித்து சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் அதிருப்தி நீடிக்கின்றது

சரியோ, பிழையோ இந்தப் போராட்டம் நேரடியாக கத்தோலிக்க திருச்சபை பின்புலத்தில் நடத்தப்படுவதான பேச்சும் கருத்தும் மக்கள் மத்தியில் உண்டு.

மாவட்ட ரீதியில், மத அடிப்படையில் மன்னாரில் எண்ணிக்கை நிலைமை 'மறை மாவட்டம்' என்பதைத் தாண்டி 'பிறை மாவட்டமாகி' விட்டதை நாம் மறந்து விடக்கூடாது.

மதத் தலைவர்கள் அரசியல் விவகாரங்களில் தலையை நுழைக்கும் போது பொறுப்புணர்வோடு செயல்பட வேண்டும். 'எடுத்தோம், கவிழ்த்தோம்' என்று நடக்க முடியாது.

மன்னார்ப் போராட்டம் இக்கட்டான காலகட்டத்தை அடைந்திருக்கும் இச் சமயத்தில், அதனை கத்தோலிக்க தரப்பே முன்னின்று முன்னெடுப்பதாகக் கூறப்படும் நிலையில் – அதற்கான தார்மீக பொறுப்பேற்று மன்னாரில் இருந்து மன்னாரை வழிநடத்தும் பொறுப்பு அவருக்கு உண்டு. இந்தச் சமயத்தில் அவர் மன்னாரை தவிக்க விட்டுச் செல்வது பொருத்தமற்றது.

## வடக்கு - கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முல்லைத்தீவைச் சேர்ந்த சுயாதீன ஊடகவியலாளரான க.குமணனைப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் கடந்த 17ஆம் திகதி அளம்பில் பொலிஸ் நிலையத்துக்கு வரவழைத்து சுமார் 7 மணி நேரம் கடுமையான விசாரணைக்கு உட்படுத்தியிருந்தனர். அத்துடன் மேலதிக விசாரணைகளுக்கு அழைக்கப்படும் போது, முன்னிலையாக வேண்டும் எனவும், விசாரணை விடயங்கள் தொடர்பில் வெளியில் கூறக் கூடாது எனவும் கடுமையாக அறிவுறுத்தியே குமணன் விடுவிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## நல்லூர் கந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பெறவுள்ளது.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பெருந்திருவிழா கடந்த மாதம் 29ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இதில், இன்று வியாழக்கிழமை தேர்த் திருவிழா நடைபெறவுள்ளது. காலை 6 மணிக்குக் காலசாந்தி பூஜையும் , 6.15 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும் நடைபெற்று சுவாமி உள்வீதி வலம் வந்து, 7 மணியளவில் தேரில் ஆரோகணிப்பார்.

நாளை வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழா காலை 6.15 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையுடன் ஆரம்பமாகும். மாலை 5.30 மணிக்குக் கொடியிறக்கம் நடைபெறும்.

நாளைமறுதினம் சனிக்கிழமை மாலை 5.30 மணிக்குப் பூங்காவனத் திருவிழா நடைபெறும்.

இதேவேளை, நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தத் தேர்த்திருவிழாவொட்டி யாழ்ப்பாணம் மாவட்டப் பாடசாலைகளுக்கு இன்று வியாழக்கிழமை விசேட விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.






# கிராமிய வறுமை ஒழிப்பை நோக்கமாகக் கொண்ட பெண்களை வலுவூட்டும் திட்டங்களை தயாரியுங்கள்

## ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பணிப்புரை

மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் 2026 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்திற்கான பூர்வாங்க கலந்துரையாடல் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கும் இலங்கை மகளிர் பணியகம், தேசிய பெண்கள் குழு, முன் பிள்ளைப்பருவ அபிவிருத்திக்கான தேசிய செயலகம், நன்னடத்தை சிறுவர் பராமரிப்புத் திணைக்களம் மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை ஆகிய நிறுவனங்களினால் 2025 வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடுகள் மூலம் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் மற்றும் அவற்றின் முன்னேற்றம் குறித்து தனித்தனியாக ஆராயப்பட்டது.

குறிப்பிட்ட நிதியாண்டிற்குள் இந்த வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீடுகளை உரிய திட்டங்களுக்கு முறையாகப் பயன்படுத்தி, அவற்றின் நன்மைகளை மக்களுக்கு வழங்குவதன் அவசியத்தை வலியுறுத்திய ஜனாதிபதி, மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் வகிபாகத்தையும் வலியுறுத்தியதோடு, அதன் எதிர்காலத் திட்டங்கள் குறித்தும் கேட்டறிந்தார்.

கிராமிய வறுமை ஒழிப்பை நோக்கமாகக் கொண்ட, பெண்களை வலுவூட்டும் வேலைத் திட்டங்களைத் தயாரிக்குமாறு இதன்போது ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்ததுடன், மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் , மீன்பிடி, விவசாயம் மற்றும் தொழில்துறை உள்ளிட்ட அனைத்து அமைச்சுகளின் நோக்கமும் கிராமிய மக்களை வறுமையிலிருந்து விடுவிப்பதாக இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இதற்காக அரச மற்றும் தனியார் துறைகள் மட்டுமன்றி, அரச சார்பற்ற நிறுவனங்களையும் ஒருங்கிணைக்க வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இதற்காக முறையான பொறிமுறை ஒன்றைத் தயாரிக்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

சிறுவர் பராமரிப்பு மையங்களில் உள்ள பிள்ளைகள் மற்றும் பாடசாலையை விட்டு வெளியேறியவர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துமாறும், பாடசாலைக் கல்வியை நிறைவு செய்யும்வரை, ஒருபிள்ளைகூடகல்வியை கைவிடாமல் இருப்பதை உறுதி செய்யுமாறும் ஜனாதிபதி மேலும் பணிப்புரை விடுத்தார்.

சமூக ஊடகங்கள் மூலம் சிறுவர்களுக்கு இடம்பெறும் அழுத்தங்கள் மற்றும் துஷ்பிரயோகத்தைத் தடுக்க பரந்த பொறிமுறையை உருவாக்குவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில், மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் சரோஜா சாவித்ரி போல்ராஜ், மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் பிரதி அமைச்சர் வைத்தியர் நாமல் சுதர்ஷன, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும, ஜனாதிபதயின் சிரேஷ்ட மேலதிக செயலாளர்களான ரஸல் அபோன்சு, கபில ஜனக பண்டார, ரோஷன் கமகே ஆகியோருடன் நிதி அமைச்சு மற்றும் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் குழுவும் கலந்து கொண்டனர்.





# பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வில் உறுதியாக உள்ளோம்

## அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவிப்பு

அனைவரினதும் ஒத்துழைப்புடனும் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பளத்தை அரசாங்கம் நிச்சயமாக அதிகரிக்கும் என பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பான அரசாங்கத்தின் நகர்வுகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தானும் தொழில் அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோவுடன் இணைந்து, இரு அமைச்சுக்களினது அதிகாரிகளை அழைத்து, பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் குறித்து கலந்துரையாடினோம் என தெரிவித்தார்.

அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டதுடன், பெருந்தோட்ட தொழிலாளர்களின் நாளாந்த அடிப்படை சம்பளமும் ஆயிரத்து 700 ரூபாவாக அதிகரிக்கப்பட வேண்டும் என ஜனாதிபதியினால் வரவு செலவு திட்டத்தில் முன்மொழியப்பட்டது.

அரசாங்கம் என்ற வகையில் பெருந்தோட்ட நிறுவனங்கள் பலவற்றுடனும் இதுதொடர்பில் பல சுற்றுப்பேச்சுவார்த்தைகளை நாம் முன்னெடுத்தோம். அதன்போது, சம்பளத்தை வழங்குவதில் உள்ள சிரமங்களை அவர்கள் விளக்கியிருந்தனர்.

சில நிறுவனங்களுடன் பிரத்தியேகமாக கலந்துரையாடும்போது, சில அளவுக்கு தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிக்க முடியும் என குறிப்பிட்டிருந்தனர்.

எவ்வாறாயினும், நாம் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு, உரிய நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றோம். எனவே, இதனை கைவிடாமல் நிச்சயமாக நிறைவேற்றுவோம் என அமைச்சர் சமந்த வித்யாரத்ன



தெரிவித்துள்ளார்.

அதேநேரம், இந்த முறைமை சாத்தியப்படாவிட்டால் புதிய முறைமையொன்றிலாவது இதற்கான தீர்வு காணப்பட வேண்டும் எனவும் அதற்காக ஒத்துழைப்பு வழங்குவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

இதனையடுத்து, உரையை தொடர்ந்த அமைச்சர் சமந்த வித்யாரத்ன, தொழிலாளர்களுக்கான சம்பளத்தை அதிகரிப்பதே தங்களது நோக்கம் எனவும் எதிர்க்கட்சிகளும் இதற்கு ஒத்துழைப்பு வழங்க முடியும் எனவும் தெரிவித்தார்.

தொழிற்துறையொன்றை பாதுகாப்பதன் மூலம் தொழிலாளர்களையும் பாதுகாக்க முடியும். அனைவரையும் பாதுகாப்பதற்கான வழிமுறையை ஆராய்வதாகவும், அனைவரினதும் ஒத்துழைப்புடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்போம் எனவும் அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்துள்ளார்.



# 100 தொலைத்தொடர்பு கோபுரங்களை நிர்மாணிப்பதற்கு அரசாங்கம் தீர்மானம்

தொலைபேசி தொடர்பாடல் மோசமான நிலையில் காணப்படும் பகுதிகளை உள்ளடக்கி 100 தொலைத்தொடர்பு கோபுரங்களை நிர்மாணிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கிராமத்திற்கு தொடர்பாடல் வேலைத் திட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

கிராமத்திற்கு தொடர்பாடல் வேலைத் திட்டத்தின் கீழ், தொலைத்தொடர்பு கோபுரம் நிர்மாணிப்பதற்கான செலவில் 75 வீதம் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படும்.

கிராமிய பிரதேசங்களிலும் தொலைபேசி தொடர்பாடல் மோசமான நிலையில் காணப்படும் பகுதிகளிலும் இடையூறுகளை நீக்குவது இதன் நோக்கமென டிஜிட்டல் பொருளாதார விவகாரங்கள் பிரதியமைச்சர் எரங்க வீரரத்ன தெரிவித்துள்ளார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## மைத்திரியின் புலம்பல்

2009இல் இலங்கையில் யுத்தம் முடிவுற்ற பின்னர், நாடு எதிர்கொண்ட மிகப் பேரழிவு விடயம் ஈஸ்டர் ஞாயிறு தொடர்க் குண்டு தாக்குதலாகும்.

அந்தத் தாக்குதல் தொடர்பில் முன்கூட்டியே எச்சரிக்கைகள் தாராளமாகக் கிடைத்தும் அதைத் தடுக்க தவறிய அரசு என்று அப்போதைய ஆட்சிப் பீடம் விமர்சிக்கப்பட்டது. அந்த ஆட்சிப் பீடத்தின் தலைவராக இருந்தவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. அவர் இப்போது இந்தத் தொடர்க் குண்டு தாக்குதல் தொடர்பில் பகிரங்க நிகழ்வு ஒன்றில் வெளியிட்டு இருக்கும் தகவல்கள் வெளிப்படையானவையாக இல்லாவிட்டாலும், சர்ச்சையை ஏற்படுத்துவானாக அமைந்திருக்கின்றமை கவனிக்கத் தக்கதாகும்.

இந்தத் தொடர் குண்டுத் தாக்குதலின் பின்னணியில் உள்ள மூளையை எதிர்கொள்ள இலங்கை வலுற்றது என்று கூறிய அவர், அந்தத் தனி நபர் இங்கு அரசாங்கங்கள், இராணுவம் மற்றும் புலனாய்வு அமைப்புகளுக்கு நன்கு தெரிந்தவர் என்றும், ஆனால் அவர் எட்டப்படவே முடியாதவர் என்றும் அவர் கூறினார். ஆனால் அந்த நபர் யார் என்பதை அவர் தெளிவாக வெளிப்படுத்தவில்லை.

இலங்கை மன்ற நிறுவனத்தில் நடந்த ஒரு நிகழ்வில் உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கொடிய தாக்குதல்களின் மூளையைக் கண்டுபிடிக்க அதிகாரிகள் துடித்துக்கொண்டிருந்தாலும், உண்மையை பொதுமக்களுக்கு எளிதில் வெளிப்படுத்த முடியாது என்றும் கூறியிருக்கின்றார்.

"இதெல்லாம் எப்படி நடந்தது என்பது பற்றி நான் குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் எல்லாவற்றையும் சொல்லிவிட்டேன். ஆனால் அதில் எதையும் பொதுமக்களுக்கு வெளிப்படுத்த முடியாது. மூளையாகச் செயல்படுபவர் என்று அழைக்கப்படுபவரைக் கண்டுபிடிக்க அனைவரும் துடிக்கிறார்கள், ஆனால் உண்மை என்னவென்றால் - அது யார் என்பது அவர்களுக்கு ஏற்கனவே தெரியும். ஒவ்வொரு அரசாங்கமும், இராணுவமும், புலனாய்வு நிறுவனமும் அறிந்திருக்கின்றன. மூளையாகச் செயல்பட்டவர் எங்கே என்று நம்மால் சொல்ல முடிந்தாலும், அவரை நாம் எதிர்கொள்ள முடியாது" என்ற சாரப்படவும் சிறிசேன அங்கு கூறியிருக்கின்றார்.

"கடுமையான குற்றங்கள் நடந்துள்ளன - சில வேண்டுமென்றே திட்டமிடப்பட்டன. இந்தத் திட்டங்கள் எனது பெயரை சேற்றில் இழுத்து விட்டு, எனது அரசாங்கத்தையும் நாசமாக்கி, எனது கட்சியையும் அழித்துவிட்டன" என்றும் அவர் கூறினார்.

இந்தத் தொடர் குண்டுத் தாக்குதல்களின் பின்னணி, சூத்திரதாரிகள் மற்றும் விடயங்கள் தொடர்பில் ஏதோ சில உண்மைகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளிப்படுத்த முனைகிறார் என்பது இந்தக்கூற்றுகளில் இருந்து தெரிய வந்தாலும், அவர் சொல்லவரும் விடயம் என்ன என்பது பற்றிய தெளிவு மக்களுக்குக் கிட்டவில்லை.

தொடர் குண்டுத் தாக்குதல்களின் சூத்திரதாரி யார் என்பதை வெளிப்படையாக அவரும் தெளிவுபடுத்தாத வரை இவ்வாறு பூடகமாகக் கூறப்படும் கருத்துக்கள் மென்மேலும் குழப்பங்களை வெளிப்படுத்துமே தவிர உண்மைகளை அம்பலப்படுத்த உதவ மாட்டா. உண்மைகளை அம்பலப்படுத்துவதாயின், தெளிவான - வசனங்களில் உறுதியான - கருத்துக்களில் விளக்கமாக - குழப்பமின்றிக் கூற வேண்டும். ஆனால் அவை எவையும் மைத்திரியின் தற்போதைய புலம்பலில் அடங்கி இருக்க வில்லை என்பதுதான் உண்மையாகும்.



# தமிழக வெற்றிக் கழகத்தின் மாநாட்டு திடலில் சரிந்து விழுந்த 100 அடி உயர கொடிக் கம்பம்

தமிழக வெற்றிக் கழகத்தின் இரண்டாவது மாநாட்டின் ஏற்பாடுகளின் போது 100 அடி உயர கொடிக்கம்பம் சாய்ந்து விழுந்ததால் நேற்று பரபரப்பு ஏற்பட்டது.

இந்த கம்பம் ஒரு காரின் மீது விபத்துக்குள்ளாகியுள்ளது. காரிற்குள் யாரும் இல்லை என்பதால் உயிர் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

தமிழக வெற்றிக் கழகத்தின் இரண்டாவது மாநில மாநாடு மதுரை பாரபத்தியில் இன்று இடம்பெறவுள்ள நிலையிலேயே, இந்த சம்பவம் ஏற்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸ் தரப்பில் கூறுகையில்,

“இந்த மாநாட்டையொட்டி 100 அடி உயர கம்பத்தில் கட்சிக் கொடி ஏற்ற ஏற்கெனவே முடிவெடுக்கப்பட்டு இருக்கிறது. ஆனாலும், 100 அடி கொடிக் கம்பம் தொடர்ந்து 5 ஆண்டாக அதே இடத்தில் த.வெ.க. கொடி பறக்கவிடும் வகையில் ஒப்பந்தம், சம்பந்தப்பட்ட நில உரிமையாளருடன் கட்சியினர் பேசியுள்ளனர்.

இதில் உடன்பாடு ஏற்படுவதில் தாமதம் ஏற்பட்டு, 2 நாளுக்கு முன்புதான் உடன்பாடு ஏற்பட்டு, அதன்பின் அவசரமாக கம்பம் நடப்பட்டு இருக்கிறது. அதிக எடை தாங்காமல் நாடா கயிறு அறுந்து விழுந்ததாக சொல்கின்றனர். எதுவானாலும், இந்த விபத்தில் உயிர் சேதம் எதுவுமில்லை.” என்றனர்.

# நடிகர் ரவி மோகனின் சொத்துகளை முடக்க மனு தாக்கல் செய்ய உயர் நீதிமன்றம் அனுமதி

படத்தில் நடிக்க முன்பணமாக பெற்ற 6 கோடி இந்திய ரூபாவை திருப்பி செலுத்தக் கோரி தொடரப்பட்ட வழக்கில், உயர் நீதிமன்ற உத்தரவுப்படி சொத்துப் பட்டியலை தாக்கல் செய்யாத நடிகர் ரவி மோகனின் சொத்துகளை முடக்கும் வகையில் மனு தாக்கல் செய்ய படத் தயாரிப்பு நிறுவனத்துக்கு உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

இது தொடர்பாக பாபி டச் கோல்டு யுனிவர்சல் பிரைவேட் லிமிட்டெட் என்ற படத் தயாரிப்பு நிறுவனத்தின் இயக்குநர் பாலச்சந்திரன் சென்னை உயர் நீதிமன்றத்தில் ஏற்கெனவே மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு கடந்த முறை நீதிபதி அப்துல் குத்தூஸ் முன்பாக விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் விஜயன் சுப்ரமணியனும், நடிகர் ரவி மோகன் தரப்பில் வழக்கறிஞர் எஸ். கார்த்திகைபாலனும் ஆஜராகி வாதிட்டனர். இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, 6 கோடி இந்திய ரூபா சொத்து உத்தரவாதத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய நடிகர் ரவி மோகனுக்கு உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில், இந்த வழக்கு நேற்று மீண்டும் நீதிபதி அப்துல்குத்தூஸ் முன்பாக விசாரணைக்கு வந்தது. அப்போது படத் தயாரிப்பு நிறுவனம் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர்,

“உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுப்படி நடிகர் ரவி மோகன், சொத்து உத்தரவாதத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எனவே எங்களுக்கு செலுத்த வேண்டிய



6 கோடி இந்திய ரூபா பாக்கிக்காக அவரது சொத்துகளை முடக்கும் வகையில் மனு தாக்கல் செய்ய அனுமதியளிக்க வேண்டும்” எனக் கோரினார்.

அதையேற்ற நீதிபதி, இதுதொடர்பாக மனு தாக்கல் செய்ய படத் தயாரிப்பு நிறுவனத்துக்கு அனுமதியளித்து உத்தரவிட்டுள்ளார்.



# இந்திய மக்களவையில் 3 மசோதாக்கள் தாக்கல்!

இந்திய மக்களவையில் மத்திய உட்துறை அமைச்சர் அமித்ஷா 3 முக்கிய மசோதாக்களை அறிமுகப்படுத்தியுள்ளார்.

அரசமைப்பு திருத்த மசோதா, ஒன்லைன் விளையாட்டு ஒழுங்குப்படுத்தும் மசோதா, மற்றும் ஜம்மு காஷ்மீர் மறுசீரமைப்பு மசோதா ஆகிய 3 முக்கிய மசோதாக்களை அமைச்சர் அமித் ஷா தாக்கல் செய்துள்ளார்.

இதில் முக்கியமானதாக, கடுமையான குற்றவியல் குற்றச்சாட்டுக்களில் கைது செய்யப்பட்ட பிரதமர், முதலமைச்சர் அமைச்சர்கள் 30 நாள்களுக்கு மேல் சிறையில் இருந்தால் தானாகவே பதவி நீக்கம் செய்யப்படுவர் என்ற சட்ட முன்மொழிவு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சமீபத்தில் பல எதிர்க்கட்சி முதல்வர்கள், அமைச்சர்கள் அமுக்லாக்கத் துறையால் கைது செய்யப்பட்டிருந்தனர். இதனை முன்னிட்டு, இந்த மசோதாவை மத்திய அரசு கொண்டுவந்துள்ளது.

எவ்வாறு இருப்பினும் இந்த மசோதாவுக்கு எதிர்க்கட்சிகள் கடுமையாக எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

# ஆப்கனிஸ்தானில் பஸ் விபத்து; குழந்தைகள் உட்பட 79 பேர் பலி



ஆப்கனிஸ்தானின் ஹிராட் மாகாணத்தில் பஸ் ஒன்று விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த 19 குழந்தைகள் உட்பட 79 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஈரானில் இருந்து ஆப்கனிஸ்தானுக்கு திரும்பியவர்கள் பயணித்த பஸ் ஒன்று அந்நாட்டின் வடமேற்கில் உள்ள ஹிராட் மாகாணத்தில் உள்ளூர் நேரப்படி இரவு 8.30 மணிக்கு விபத்துக்குள்ளானது. லொறி மற்றம் மோட்டார் சைக்கிள் மீது மோதியதில் பஸ் தீ பிடித்து எரிந்துள்ளது. இந்த விபத்தில் 19 குழந்தைகள் உட்பட 79 ஆப்கனியர்கள் உயிரிழந்துள்ளனர். ஆப்கன் உள்துறை செய்தித் தொடர்பாளர் அப்துல் மடீன் கானி இதனைத் தெரிவித்துள்ளார்.

வீதி வசதிகள் போதுமான அளவில் இல்லாததாலும், சாரதிகளின் கவனக்குறைவினாலும் ஆப்கனிஸ்தானில் வீதி விபத்துக்கள் அடிக்கடி நிகழ்கின்றன. கடந்த சில மாதங்களில் ஈரானில் இருந்து 18 லட்சம் ஆப்கனியர்கள் வலுக்கட்டாயமாக தங்கள் நாட்டுக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

அதேபோல், கடந்த ஒரு வருடத்தில் பாகிஸ்தானில் இருந்து 1,84,459 பேரும், துருக்கியில் இருந்து 5,000 பேரும் ஆப்கனுக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். மேலும், பாகிஸ்தான் உட்பட வெளிநாட்டு சிறைகளில் இருந்த சுமார் 10,000 ஆப்கனியர்களும் அந்நாட்டுக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.



# காசா நகரைக் கைப்பற்றும் திட்டத்திற்கு இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் அனுமதி



காசா நகரைக் கைப்பற்றும் திட்டத்திற்கு இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் அனுமதி வழங்கியுள்ளார்.

இந்த நடவடிக்கைக்காக சுமார் 60 ஆயிரம் பாதுகாப்புப் படையினர் வரவழைக்கப்பட்டுள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

60 நாள் போர்நிறுத்தம் மற்றும் காசாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பணயக் கைதிகளை விடுவிப்பதற்கான முன்மொழிவுக்கு ஹமாஸின் பதிலை இஸ்ரேல் ஆய்வு செய்து வரும் நிலையில் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இஸ்ரேலின் தரைவழித் தாக்குதல் நடக்கக்கூடும் என்ற அச்சத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் அங்கிருந்து வெளியேறி, பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர் என கூறப்படுகிறது.

பாலஸ்தீன பிரதேசத்தின் மையப் பகுதியில் உள்ள காசா நகரத்தின் கட்டுப்பாட்டைக் கைப்பற்றுவதற்கான புதிய தாக்குதலுக்கான திட்டங்களை இஸ்ரேல் அறிவித்ததைத் தொடர்ந்து, போரை நிறுத்துவதற்கான முயற்சிகள் தீவிரமடைந்தன.

அமெரிக்க ஆதரவுடன் கூடிய போர் நிறுத்தத் திட்டம் குறித்து இரு தரப்பினருக்கும் இடையே மறைமுகப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்குவதற்கான திட்டங்களை எகிப்து மற்றும் கட்டார் முன்வைத்துள்ளன.

இதன் ஒரு பகுதியாக, நூற்றுக்கணக்கான காசா கைதிகளை விடுவிக்க ஹமாஸ் கோரியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும்,போரைமுடிவுக்குக்கொண்டு வருவதற்காக அமைச்சரவை நிறுவிய கொள்கைகளின்படி, 50 பணயக்கைதிகளையும் விடுவிக்க இஸ்ரேல் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஜப்பானில் வீழ்ந்தது பிரகாசமான விண்கல்



மேற்கு ஜப்பானில் பிரகாசமான ஒளியுடன் கூடிய தீப்பந்து ஒன்று வானிலிருந்து வீழ்ந்துள்ளது.

இது ஒரு பிரகாசமான விண்கல் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

அவை தீப்பந்து விண்கற்கள் என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளன.

ககோஷிமா மற்றும் மியாசாகி பகுதிகளில் உள்ள மக்கள் சமூக ஊடகங்களில் இந்த பிரகாசமான விண்கல் வீழ்ந்த காணொலியை பகிர்ந்து வருகின்றனர்.



# வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த தேர்த்திருவிழா இன்று!

நல்லூர் கந்தசுவாமி கோயிலின் வருடாந்த தேர்த் திருவிழா இன்றாகும். இது நல்லூர் ஆலயத்தின் முக்கிய திருவிழாக்களில் ஒன்றாகும். தேர்த் திருவிழா அன்று, ஆறுமுகப் பெருமான் வள்ளி, தெய்வானையுடன் பெரிய தேரில் எழுந்தருளி வீதி உலா வருவார். இந்த நிகழ்வைக் காண பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கூடுவார்கள்.

நல்லூர் கந்தசுவாமி கோயில் யாழ்ப்பாணத்தின் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கோயிலாகும். பல நூற்றாண்டுகளாக, இங்கு தேர்த் திருவிழா சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

தேர்த் திருவிழா அன்று, ஆலயத்தில் இருந்து முருகன் வள்ளி, தெய்வானையுடன் பெரிய தேரில் எழுந்தருளி, வீதி உலா வருவார். இந்த நிகழ்வைக் காண ஆயிரக்கணக்கான பக்தர்கள் கூடுவார்கள். தேர் இழுக்கும் நிகழ்வு ஒரு முக்கிய அம்சமாகும்.

பக்தர்கள் தேரை வடம் பிடித்து இழுத்துச் செல்வதன் மூலம் முருகப் பெருமானின் அருளைப் பெறுவதாக நம்புகிறார்கள்.

தேர்த் திருவிழா நடைபெறும் நாள்களில், நல்லூர் பகுதி விழாக் கோலம் பூண்டிருக்கும். பக்தர்கள் தங்கள் வீடுகளை அலங்கரித்து, கோயிலுக்கு வந்து வழிபடுவார்கள்.

நல்லூர் தேர்த் திருவிழா, யாழ்ப்பாண மக்களின் சமய, சமூக வாழ்வில் ஒரு முக்கிய நிகழ்வாகும். இது பக்தர்களின் ஒன்று கூடும் இடமாகவும், கலாச்சார பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் ஒரு சந்தர்ப்பமாகவும் அமைகிறது.

இந்தத் திருவிழாவில், பக்தர்கள் மட்டுமின்றி, வெளிநாடுகளில் வசிக்கும் யாழ்ப்பாண மக்களும் கலந்து கொள்வார்கள். இது நல்லூர் கந்தசுவாமி கோயிலின் சிறப்பையும், யாழ்ப்பாணத்தின் கலாச்சார பாரம்பரியத்தையும் உலகறியச் செய்கிறது.

‘நல்ல மலரெடுத்து நல்லூரை நாடிப்போய் நல்ல மனத்தோடு நாம்பணிந்தால் நல்லமயில் ஏறி வந்து காட்சி கொடுப்பான் எழில் முருகன் தேறிவிடும் சிந்தை தெளி’.

முருகப் பெருமானது மென்மையான செந்தாமரை மலர் போன்ற திருப்பாதங்கள் நமது கண்களுக்குத் துணையாக இருப்பது போல, உண்மை குறையாத சொல்லுக்கு முருகா என்று கூறுவதே துணையாக இருக்கிறது என்பதை ‘விழிக்குத் துணை திருமென்மலர்ப் பாதங்கள் மெய்மை குன்றா மொழிக்குத் துணை முருகாவெனும் நாமங்கள்’ என்று ஆரம்பமாகும் கந்தர் அலங்காரம் பாடலில் எடுத்துச் சொல்கிறார் அருணகிரிநாதர்.

இத்தகைய மகிமைக்கு உரிய முருகப் பெருமான் எழுந்தருளியிருக்கும் ஈழத்து கந்தகோட்டங்களுள் முதன்மை பெறுவது நல்லைக் கந்தன் திருக்கோவில். இது பல நூற்றாண்டு காலங்களுக்கு முற்பட்ட வரலாற்றுப் பெருமை கொண்டது. ஆலயம் அமைந்திருக்கும் நல்லூர் பிரதேசமானது, யாழ்ப்பாணத்து தமிழ் மன்னர்களின் ஆட்சிக் காலத்தின் போது இராசதானியாக விளங்கிய சிறப்புப்பெற்றது. தமிழ் மன்னர்களது ஆட்சிக் காலத்து நினைவுகளையும், வரலாற்றுப் பதிவுகளையும் சொல்லும் ஒருசில கட்டடங்களும், கட்டட எச்சங்களும் தொல்பொருள் மரபுரிமைச் சின்னங்களாக நல்லூர் பிரதேசத்தில் இப்போதும் காணப்படுகின்றன.

யாழ்ப்பாணத்து சித்தர் பரம்பரையில் இடம்பிடித்துள்ள செல்லப்பா சுவாமிகள், சிவயோக சுவாமிகள் போன்றவர்கள் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டு ஆன்மீக வழியில் அடியெடுத்து வைத்த புனித பூமியான நல்லூர், சைவப் பெரியார்களான ஆறுமுகநாவலர், சின்னத்தம்பி புலவர், சரவண முத்துப் புலவர் போன்ற அறிஞர் பெருமக்களையும் தோற்றுவித்த பெருமைக்குரியது.

இவ்வாறு பல்வேறு வகை

தொடர்ச்சி▼



# வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த தேர்த்திருவிழா இன்று!

தொடர்ச்சி▲

யிலும் சிறப்புப் பெறுகின்ற நல்லூர் பிரதேசத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் வேலவனுக்கு இங்குள்ள ஏனைய ஆலயங்களை விட தனித்துவமான மகிமை இருப்பது மறுக்க முடியாத உண்மையாகும். நல்லூர் பிரதேசத்தில் சிறியது, பெரியது என பெருமளவு ஆலயங்கள் அமைந்திருக்கும் நிலையில், ஒவ்வொரு ஆலயமும் அங்கு எழுந்தருளியிருக்கும் மூலமூர்த்தியின் பெயரைக் குறிப்பிட்டுத்தான் அறிமுகம் செய்து கொள்ளப்படுவது வழக்கம். ஆனால், நல்லூர் கந்தப் பெருமானை மட்டும் 'நல்லூரான்' என்று குறிப்பிட்டால் போதுமானது. மேலதிக விளக்கம் எதுவுமே தேவையில்லை.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வரலாற்றுப் பதிவுகளை நோக்கும் போது, ஆலயம் ஸ்தாபிக்கப்பட்ட காலப் பகுதி தொடர்பான சரியான தகவல்களை வரலாற்று ஆய்வாளர்களால் பெற முடியாமலிருப்பதாகவே தெரிகிறது. அதுவே ஆலயத்தின் தொன்மைக்கான சான்றாகும்.

எனினும், இந்த ஆலயம் யாழ்ப்பாணத்து தமிழ் மன்னர் காலத்தில் தோற்றம் பெற்றதாகவும், அப்போது அங்கு ஏற்பட்ட உள்நாட்டுப் போர் காரணமாக ஆலயம் சேதமடைந்ததாகவும், அந்தப் போரின் போது வெற்றி பெற்று யாழ்ப்பாண இராச்சியத்தை கைப்பற்றிய தமிழ் மன்னன் பிராயச்சித்தமாக ஆலயத்தை புனரமைப்பு செய்தான் என்றும் வரலாற்றுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

1505 ஆம் ஆண்டு இலங்கையை போர்த்துக்கேயர் கைப்பற்றி ஆட்சி செலுத்துவதற்கு பல வருடங்களுக்கு முன்னதாகவே ஆலயம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதுவதற்கு இடமுண்டு. ஏனெனில், இலங்கையில் போர்த்துக்கேயர் ஆட்சியின்போது இந்து ஆலயங்கள் முற்றாக அழிக்கப்பட்டு மத வழிபாட்டுக்கும் தடை ஏற்படுத்தப்பட்டது என்ற தகவல் வரலாற்று நூல்களில் இருந்து அறியக் கூடியதாக இருக்கிறது.

போர்த்துக்கேயருக்குப் பின்னர் இலங்கையில் ஏற்பட்ட ஒல்லாந்தர் ஆட்சியின் இறுதிப் பகுதியில், இந்துமத வழிபாட்டு விடயத்தில் சிறிது தளர்வு ஏற்பட்டது. இவ்வேளையிலேயே இப்போதுள்ள இடத்திலிருக்கும் முருகப் பெருமான் ஆலயம், 1734 ஆம் ஆண்டில் இரகுநாத மாப்பாண முதலியாரால் சிறிய கோவிலாக நிறுவப்பட்டதாக வரலாறு சொல்கிறது.

இவரே ஆலய பரிபாலனத்தையும் மேற்கொண்டு வந்தார். இவரது வழிவந்த சந்ததியினரே அன்று தொடக்கம் இன்றுவரை ஆலயத்தை சிறப்பாக நிர்வகித்து வருகின்றனர். ஆலயம் இப்போது அமைந்துள்ள இடத்துக்கு முன், இதற்கு அண்மையிலுள்ள வெவ்வேறு இரு இடங்களில் ஆலயம் அமைக்கப்பட்டு பூசை வழிபாடுகள் நடைபெற்று வந்ததாக வரலாற்றுத் தகவல்களில் இருந்து அறிய முடிகிறது.

மாம்பாண முதலியார் பரம்பரையினரால் காலத்துக்குக் காலம் திருத்த வேலைகள் மற்றும் புனருத்தாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதையும், அதனூடாக ஆலயம் பல்வேறு வகையில் சிறப்புப் பெற்று திகழ்வதையும் குறிப்பிட்டுச் சொல்லலாம். அலங்கார வளைவுகளுடன் அமைந்த வகையிலான ஆலய நுழைவாயில், புதிய அமைப்பிலான வசந்த மண்டபம், புதிய சித்திரத் தேர், ஆலய தெற்கு வீதியில் கிளிக் கோபுரம் எனப்படும் நவதள இராஜகோபுரம், ஆலய வடக்கு வீதியில் நவதள குபேர வாசல் இராஜகோபுரம், எழில் மிகு வகையில் புனருத்தாரணம் செய்யப்பட்ட தீர்த்தக்கேணி, ஆலயத்தின் உள்ளே ஸ்ரீசண்முக சுவர்ண சபா மண்டபம் புனருத்தாரணம் செய்யப்பட்டு விமானத்துக்கு தங்கக் கலசத்துடன் அமைந்த பொற்கூரை என்பன கடந்த காலத்தில் அமைக்கப்பட்டமையானது, ஆலய எழுச்சிக்கும் சிறப்புக்கும் துணை செய்வனவாகவே இருந்திருப்பது குறிப்பிடத்தக்கது. அலங்காரக் கந்தனாகப் போற்றப்படும் சிறப்பு நல்லூரானுக்கு உண்டு. மகோற்சவ காலத்தில் முருகப் பெருமான் வள்ளி தெய்வயானை சமேதராக தினமும் வெவ்வேறு அலங்காரங்களுடன் வீதியுலாவரும் காட்சி பக்தி பூர்வமானது. முருகப் பெருமானுக்கு உரிய சாத்துப்படியும், வீதியுலா வரும் வாகனமும் விதம் விதமான சோடனையுடனான அலங்கரிப்பில் அமைந்திருப்பது வழக்கம்.

நல்லூர் கந்தன் இன்று தேரேறி வரும் காட்சி காண கோடான கோடி கண்கள் போதாது.



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா,
மேனாள் தமிழ்மொழிக் கல்வி
இயக்குநர்,
மெல்பேர்ன், ஆஸ்திரேலியா.

# நல்லூரான் தேர் நமக்கென்றும் பாக்கியமே!

வேலவனின் தேர் வீதியெலாம் பக்தர்கள்
காதலுடன் கந்தனைக் கைகூப்பி நிற்கின்றார்
தீராத வினையகற்ற தேரேறி வருகின்றான்
வாருங்கள் தேரிழுத்து வணங்கியே நிற்போம்

அந்தணர் மந்திரம் அரிய திருமுறை
ஆனந்த இசை கேட்டபடி கந்தன்
தேரேறி வருகின்றான் திருமுகத்தைக் காண
ஓடோடி வாருங்கள் உளமுருக வேண்டுங்கள்

வீதியிலே பக்தர் வெண்மணலில் இடமில்லை
சோதியென கந்தன் சுடர்விட்டு தெரிகின்றான்
மாதவத்தின் காரணத்தால் வந்தமர்ந்தான் நல்லூரில்
நல்லூரான் தேரேறி வருகின்றான் காணுங்கள்

ஈழத்தை விட்டு இடம்பெயர்ந்து போனாலும்
எல்லோர் நினைப்பும் நல்லூராய் இருக்கிறது
காதலுடன் யாவரும் ஓடோடி வருகின்றார்
கந்தனது தேர்பார்த்து கவலைகளைக் களைந்திடவே

சமத்துவத்தின் இருப்பிடமாய் நல்லூர் இருக்கிறது
அடியார்கள் அனைவருமே அரன்மைந்தன் அன்பர்களே
முன்னுரிமை கிடையாது முக்கியமும் கிடையாது
முருகனது அடியவராய் யாவருமே தெரிகின்றார்

கலாசாரம் பண்பாடு கந்தனது சன்னதியில்
காணுகின்ற பொழுதில் கண்ணியமே எழுகிறது
கந்தனது தேர்பார்க்க வந்துவிடும் அடியார்கள்
செந்தமிழால் கந்தனை சேவித்துப் போற்றுகிறார்

அலங்காரக் கோலத்துடன் ஆறுமுகன் வருகின்றான்
தேரமர்ந்த ஆறுமுகன் தெரிசனமும் தருகின்றான்
ஊர்கூடித் தேரிழுத்து உவகையுடன் நிற்கின்றார்
உளமுருகி யாவருமே தமைமறந்து நிற்கின்றார்

செல்லப்பா யோகர் சிறப்புடைச் சித்தர்
நல்லூரான் மண்ணில் நடந்து திரிந்தார்கள்
வல்வினை போக்கிட வந்தமர்ந்த கந்தன்
நல்லூரில் நின்று நாளுமருள் புரிகின்றான்

அல்லல் களைவான் அரவணைத்து நிற்பான்
ஆறுதல் தேறுதல் அனைவர்க்கு மளிப்பான்
சொல்லாமல் அறிவான் துயரினைத் துடைப்பான்
நல்லை நகருறையும் நம்கந்தப் பெருமான்

நல்லூரான் தேர் நமக்கென்றும் பாக்கியமே
எங்கிருந்த போதும் எப்படியும் போய்விடுவோம்
தேர்பார்த்து நாமும் தெளிவினைப் பெற்றிடுவோம்
ஆதலால் தேர்பார்ப்போம் அனைவரும் வாருங்கள் !

# நல்லை வந்த ‘மல்லி’

தென்னிலங்கை மல்லியொன்று
தெற்கு வீதியில்
நின்று கொண்டு

சொல்லி வேலையில்லை
நல்லை மகாராசன்
கொள்ளை அழகென்றான் – எம்பி

நெல்லிக் கனியுண்ட
ஔவைக்கிழவி கண்ட
குழவிக் குமரனும்
அழகோ அழகென்றான் –தம்பி

சொல்லி ஒருமணிக்குள்
செம்மணி போய்வந்து
வள்ளி மணாளனைப்
பார்க்க வந்தான் – வெம்பி

தூளிக் குழந்தைமுதல்
தாலி அறுந்தவரும்
வாலிபத் தமிழரின்
சோலி முடித்தவரும்
ஜாலியாய் இருக்க – அங்கு

புள்ளி மயிலோடு
பள்ளி அறைக்குள்
கிள்ளி விளையாடியது – போதும்.

வெள்ளி வேலோடு
அள்ளி வைத்தவரை
கொள்ளி வைக்க – வாரும்

உண்மை தெரியாமல்
உளறுது என்தேசம் – ஐயோ!

என்ன செய்வதாய்
உந்தன் உத்தேசம் – ஐயா!

கதிரமலை போகிறேன் நாளை
கதைத்தாயா எனக் கேட்பான் – என்னை

- மகேசன் கஜேந்திரன் -

# மாகாணங்களுக்குப் பெற்றுக்கொண்ட அதிகாரங்களை மீளத் தாரைவார்க்காதீர்

## வலியுறுத்துகின்றார் சுரேஷ் பிரேமச்சந்திரன்



சிலர் அறிந்தோ அறியாமலோ மாகாணசபைகளின் அதிகாரங்களை மீண்டும் மத்தியிடம் கொடுக்க முயற்சிக்கின்றனர். இத்தகைய போக்கு தமிழ்த் தேசிய இனத்தின் அதிகாரப் பகிர்விற்கான போராட்டத்தின் அடிப்படையையே இல்லாமல் செய்துவிடும் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க. பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையின் முழு விவரம் வருமாறு:

மன்னார் மறைமாவட்ட ஆயர் அருட்திரு. அ. ஞானப்பிரகாசம் அவர்கள் கடந்த 18ஆம் திகதி திங்கட்கிழமை அன்று இலங்கை ஜனாதிபதியைச் சந்தித்து மன்னார் மாவட்ட பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடினார் என மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் தமிழ்நேசன் அடிகளார் ஊடகங்களுக்கு ஒரு செய்தியை வெளியிட்டுள்ளார். இதில் குறிப்பாக மன்னார் வைத்தியசாலையை மாகாண நிர்வாகத்திடமிருந்து எடுத்து மத்திய அரசாங்கம் அதனை நிர்வகிக்க வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

மன்னார் வைத்தியசாலையை மத்திய அரசிடம் ஒப்படைப்பதற்கான இதே கோரிக்கை சில மாதங்களுக்கு முன்னர் மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் அரச அதிபர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளடங்கலாக பல்வேறுபட்ட அமைப்புகளையும் சேர்ந்த அதியுயர் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் முன்வைக்கப்பட்டு கூட்ட அறிக்கையிலும் இடம்பெற்றுள்ளது. இந்த முடிவில் இருக்கக்கூடிய பிழைகள், தவறுகள் தொடர்பாக அரசியல் கட்சிகளும் அரசியல் தலைமைகளும் அன்றே சுட்டிக்காட்டின.

இப்பொழுது நடைமுறையிலிருக்கின்ற மாகாணசபை என்பதும் அதற்குக் கிடைத்திருக்கின்ற அதிகாரங்கள் என்பதும் பலத்த போராட்டம், பலத்த இழப்புகளுக்குப் பின்பே கிடைத்தவை. இதற்காக நாம் சிந்திய இரத்தம் ஏராளம். அதிகாரப் பகிர்விற்காகத் தமிழ் மக்கள் போராடிக்கொண்டிருக்கின்ற ஒரு சூழலில் கிடைத்த அதிகாரத்தை மீள மத்திய அரசிடம் ஒப்படைப்பது போன்ற ஒரு மோசமான செயல் இருக்க முடியாது. தமிழ்த் தேசிய இனவிடுதலைப் போராட்டத்தில் பல கிறித்தவ பாதிரியார்களும் தமது உயிரையே அர்ப்பணித்துள்ளார்கள். இன்றும் கூட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும், இனவழிப்பிற்கான ஒரு தீர்வு கிடைக்க வேண்டும், தமிழ் மக்கள் முழு அதிகாரங்களுடன் தமக்கான ஒரு சுயாட்சியை நிறுவிக்கொள்ள வேண்டும் என்பதில் கிறித்தவ மதகுருமார்கள் மற்றும் இந்து சமய மதகுருமார்களும் உறுதியாக இருக்கின்றனர்.

மன்னார் மாவட்ட ஆயராக இருந்த இராயப்பு ஜோசப் அவர்கள் தமிழ் மக்களுக்கான அதிகாரங்களைப் பெற்றெடுப்பது என்பதில் மிகக் காத்திரமான – துணிச்சலான – பங்களிப்பை வழங்கியிருந்தார். தனது இறுதி மூச்சு வரை அதற்காகவே பாடுபட்டார்.

மன்னார் வைத்தியசாலையில் பல குறைபாடுகள் இருக்கலாம். ஆளணி பற்றாக்குறை, மருந்துகளுக்கான தட்டுப்பாடுகள், மாவட்ட வைத்தியசாலை என்ற அடிப்படையில் அதன் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமல் இருக்கலாம். கடந்த ஏழு ஆண்டுகளாக மாகாணசபை இல்லாத நிலையில், அந்த வைத்தியசாலையின் தேவைகளை மன்னார் மாவட்ட நிர்வாகிகளோ, ஆயரோ, அல்லது நலன் விரும்பிகளோ ஜனாதிபதியிடமோ அரசிடமோ கேட்டுப்பெறுவதென்பது தவறானதல்ல. அதனை விடுத்து, வைத்தியசாலையையே மத்திய அரசிடம் ஒப்படைப்பதென்பது அதிகாரப் பகிர்வுக்காகப் போராடும் எமது அடிப்படையையே சிதைப்பதாகும். சிங்கள தரப்பின் ஒருபகுதியினர் மாகாணங்களுக்கு அதிகாரங்கள் பகிரப்படக்கூடாதென்பதில் இன்னும் உறுதியாக இருக்கின்றனர்.

விமல் வீரவன்ஸ, சரத்வீரசேகர, உதய கம்மன்பில போன்றவர்களும் இப்பொழுது ஆட்சியில் இருப்பவர்களும் கூட அதிகாரப்பகிர்வை ஏற்றுக்கொள்ளாத தரப்பினராகவே இருக்கின்றனர்.

சுகாதாரத் துறையின் அதிகாரப் பகிர்வில் போதனா வைத்தியசாலைகள் தவிர்ந்த ஏனைய சகல வைத்தியசாலைகளும் மாகாண அரசிற்கு உட்பட்டவையாகவே இருக்கின்றன. வடக்கு மாகாணம் ஆட்சியில் இருந்தபொழுது மாகாண சுகாதாரத்துறை தொடர்பாக ஒரு நியதிச் சட்டத்தையும் உருவாக்கியிருந்தனர். அதன் பிரகாரம் மாகாணசபைக்கு உட்பட்ட வைத்தியசாலைகளை மத்திய அரசாங்கம் பொறுப்பேற்பதாக இருந்தால் அது மாகாணசபையின் பெரும்பான்மையின் ஒப்புதலுடனேயே முடியும். அவ்வாறு இல்லாமல் செய்வதென்பது அரசமைப்பை மீறும் செயலாகும்.

ஆகவே நிலைமைகள் இவ்வாறிருக்க, சில அதிகாரிகளும் மதத் தலைவர்களும் எமக்குக் கிடைத்த அதிகாரங்களை மீளவும் ஒப்படைக்க தீர்மானங்களை நிறைவேற்றுவதும் அதுதொடர்பான பேச்சுவார்த்தைகளை நடாத்துவதும் மிகவும் தவறானதும் பிழையானதும் மட்டுமன்றி அதிகாரப் பகிர்வுக்கு எதிரான செயற்பாடுமாகும்.


அதிகாரிகளிடமும், மதத் தலைவர்களிடமும் நாம் விநயமாக வேண்டுவதென்னவென்றால் மாகாணசபைகளுக்குக் கிடைத்திருக்கக்கூடிய அதிகாரங்களை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமே தவிர, அவற்றை மீள ஒப்படைப்பது தொடர்பாக சிந்திப்பதோ, முயற்சிப்பதோ ஒரு தவறான அணுகுமுறையாகும் என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

மாகாணஅதிகாரங்களைநடைமுறைப்படுத்துவதில் பல இடர்பாடுகளை அதிகாரிகள் சந்திக்கலாம். நிதி வளங்கள் குறைவாக இருக்கலாம். ஆளணிகள் குறைவாக இருக்கலாம். வேறுபல குறைபாடுகளும் ஏற்படலாம். இவற்றை எவ்வாறு நிவர்த்தி செய்வது என்பதை நிர்வாகிகள் சிந்திக்க வேண்டுமே தவிர, மாகாண வைத்தியசாலைகளை மீள ஒப்படைப்பதென்பது போராடிப் பெற்ற சில அதிகாரங்களை நாமே கைவிடுவதாகும். அதிகாரப்பகிர்வு என்னும் எமது பிரதான கோரிக்கையை சிறுமைப் படுத்துவதுமாகும். – என்று உள்ளது.

### ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் அனுசரணையுடன்

# தாயகம் மீளும் அகதிகளை கைதுசெய்து சர்வதேசச் சட்டங்கள அரசு மீறுகின்றது!

## நாடாளுமன்றில் சத்தியலிங்கம் குற்றச்சாட்டு



இலங்கையின் உள்நாட்டுப்போர் காரணமாக பாதிக்கப்பட்டு இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்றவர்கள், அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் ஆணையத்தின் அனுசரணையுடன் தாயகம் திரும்பும்போது விமான நிலையத்தில் கைதுசெய்யப்படுவதானது சர்வதேச சட்டங்களை மீறும் மிகமோசமான செயற்பாடாகும் என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் பத்மநாதன் சத்தியலிங்கம் அரசாங்கத்தின் மீது குற்றஞ்சாட்டியுள்ளார்.

நேற்று நாடச்ளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையின் உள்நாட்டுப்போர் காரணமாக மக்கள் தமது உயிரை காப்பாற்றுவதற்காக தமது பூர்வீக இடங்களில் இருந்து வெளியேறி உலகின் பல நாடுகளிற்கும் புலம்பெயர்ந்தனர். அவ்வாறே பெரும் எண்ணிக்கையானோர் இந்தியாவிற்கு 1983 இனக் கலவரத்தின்போதும் அதன்பின்னராக குறிப்பாக 90களிலும் சென்று இலங்கை ஏதிலிகளிற்கான முகாம்களில் தங்கியிருந்தனர். இலங்கையில் யுத்தம் முடிவிற்கு வரமுன்னரும் வந்த பின்னரும் அவர்கள் தங்கள் சுயவிருப்பின் பேரில் தங்களது சொந்த நாட்டிற்கு திரும்ப விருப்பம் கொண்டிருந்தனர். அந்த வகையில் சுயவிருப்பின் அடிப்படையில் இலங்கை வந்தவர்கள் பல இன்னல்களிற்கு முகம் கொடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

குறிப்பாக அவர்களது காணிகள் நீண்டகாலமாக பராமரிக்கப்படாத நிலையில் யுத்தம் முடிவடைந்த பின்னர் பல்வேறு அரச திணைக்களங்களால் அவை ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இதனால் அவர்கள் தங்களது உறவினர்கள் மற்றும் நண்பர்களின் உதவியுடன் தங்கியிருந்தனர். அத்துடன் அவர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியானது. இலங்கை திரும்பும்போது அகதிகளிற்கான ஐக்கிய நாடுகள் நிறுவனத்தினால் வழங்கப்படும் நிவாரண நிதி மற்றும் அவர்களது சொந்தச் செலவில் சிலகாலங்கள் தங்கியிருந்து வாழ்க்கையை கொண்டு நடத்த முடியாத நிலையில் மீண்டும் அகதியாக இந்தியா சென்ற வரலாறு உள்ளது. ஆனால் தற்போது இப்பிரச்சினைகளிற்கு மேலாக புதியதோர் பிரச்சினை இந்த அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டுள்ளது. அதாவது அகதிகளிற்கான ஐக்கிய நாடுகளின் நிறுவனத்தின் அனுசரனையுடன் சுயவிருப்பின்பேரில் நாடு திரும்பும் ஏதிலிகள் இலங்கைக்குள் வந்ததும் கைது செய்யப்படுகிறார்கள். இது சர்வதேச சட்டங்களை அப்பட்டமாக மீறும் செயற்பாடாகும்.

அண்மையில் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திலும் கடந்த 12.08.2025 அன்று கட்டுநாயக்க விமான நிலையத்திலும் இவ்வாறான கைதுகள் இடம்பெற்றுள்ளன. இவர்கள் இலங்கை வரும்போது சம்பந்தப்பட்டவர்களின் குற்றவியல் வரலாறுப் பின்னணி ஆராயப்பட்டே இலங்கைக்கு மீளத் திரும்புவதற்கு அனுமதிக்கப்படுகின்றார்கள். அவ்வாறிருக்கும்போது இவர்கள் கைது செய்யப்படுவதன் நோக்கம் என்ன? மேற்குறிப்பிட்டவர்கள் இந்திய அரசால் முகாம்களில் பராமரிக்கப்பட்டு, இலங்கை அரசால் கடவுச்சீட்டு வழங்கப்பட்டு ஐக்கிய நாடுகள் அகதிகள் நிறுவனத்தின் அனுசரணையுடன் நாட்டிற்குள் வருபவர்கள். ஆகவே சட்டநடைமுறைகளை பின்பற்றி தாயகம் திரும்புபவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதும் அவர்களது கண்ணியத்தை பாதுகாப்பதும் அரசின் கடமையாகும்.

அண்மைக்கால கைதுகளால் சுயவிருப்பின்பேரில் ஏதிலிகளை சொந்த நாட்டிற்கு கொண்டுவருகின்ற தமது செயற்பாட்டை ஐக்கிய நாடுகள் அகதிகள் நிறுவனம் தற்காலிகமாக நிறுத்திவைப்பதாக நேற்று அறிவித்துள்ளது. இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதியிடம் நான் நேரடியாக பேசியபோது விடயத்துடன் தொடர்புடைய அமைச்சருக்கு அறிவுறுத்தல் வழங்குவதாகவும் அவருடன் பேசும்படியும் கூறினார். எனவே சுயவிருப்பில் இலங்கை வரும் ஏதிலிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதுடன் அவர்களை கண்ணியத்துடன் நடத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என இவ் உயரிய சபையை கேட்டுக் கொள்கிறேன். கைது செய்யப்பட்டவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதுடன் விரைவில் அவர்களை இவ்வழக்குகளில் இருந்து விடுதலை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நான் வடக்குமாகாண மீள்குடியேற்றத்திற்கான அமைச்சராக குறுகிய காலம் பணியாற்றியபோது ‘வடக்கு மாகாணத்திற்கான மீள்குடியேற்றக் கொள்கை’ ஒன்றை தயாரித்து மத்திய மீள்குடியேற்ற அமைச்சிற்கு அனுப்பியிருந்தோம். அதனடிப்படையில் மத்திய அமைச்சினாலும் இவ்வாறான கொள்கை ஒன்று தயாரிக்கப்பட்டது. ஆனால் இவ்வேலைத்திட்டம் சில காரணிகளினால் முற்றுப்பெறவில்லை. எனவே காணி, வாழ்வாதாரம், கல்வி, சுகாதாரம் மற்றும் வேலைவாய்ப்பு போன்ற முக்கிய விடயங்களை உள்ளடக்கிய நாட்டிற்கான புதிய மீள்குடியேற்ற கொள்கை ஒன்றை தயாரிப்பதனூடாக உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களையும் வெளிநாடுகளிற்கு ஏதிலிகளாக சென்று சுய விருப்பின்பேரில் நாடு திரும்புபவர்களையும் அவர்களது பூர்வீக இடங்களில் மீளக் குடியேற்ற ஏற்பாடுகளை செய்யவேண்டும் என இவ் உயரிய சபையை கோருகிறேன். இச்செயற்பாடு நிரந்தர சமாதானத்திற்கும் எமது நாட்டின் எதிர்கால பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கும் வழிவகுக்கும். - என்றார்.



# சர்வதேச இளைஞர் தினத்தை முன்னிட்டு நாடாளுமன்றில் செவ்வாய் விசேட நிகழ்வு

**(பா.சதீசன்)**

சர்வதேச இளைஞர் தினத்தை முன்னிட்டு இளைஞர்களுக்கான நாடாளுமன்ற ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட நிகழ்ச்சி நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று முன்தின்ச்ம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வன்னிமாவட்ட நாடா

கரன், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் உட்பட பல எம்.பிக்கள் பங்கேற்றனர்.

இந்நிகழ்வில் 2025ஆம் ஆண்டில் தேசிய இளைஞர் மாநாட்டின்போது நியமிக்கப்பட்ட தேசிய இளைஞர் மாநாட்டின் உறுப்பினர்களுடனான கலந்துரையாடல் இடம்பெற்றது.

டின் உறுப்பினர்களுக்கு பாராட்டுச் சின்னங்களும் வழங்கிவைக்கப்பட்டன்.

மேலும் இந் நிகழ்வில் பிரதமர் ஹரிணி அமரசூரிய, சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன, இளைஞர் விவகாரங்கள் பிரதியமைச்சர் எரங்க குணசேக மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப்






















# மட்டு நகரில் ஐஸ் போதைப் பொருள்களுடன் 23 வயதுடைய இரண்டு இளைஞர்கள் கைது





(கனகராசா சரவணன்)

கொழும்பில் இருந்து மட்டக்களப்புக்குக் கொண்டுவரப்பட்ட போதைப் பொருளை வியாபாரத்துக்காக எடுத்து கொண்டு சென்ற இரு வியாபாரிகளை நேற்றுப் புதன்கிழமை அதிகாலையில் நகர்பகுதியில் வைத்து 7,700 மில்லிக் கிராம் ஐஸ் போதை பொருளுள் மற்றும் ஒரு இலட்சத்து 20 ஆயிரத்து 640 ரூபா பணத்துடன் தாங்கள் கைது செய்துள் ளனர் என மட்டு. தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜி.எம்.ஜி. பிரியந்த பண்டார தெரிவித்தார்.

பொலிஸ் நிலைய பொலிஸ் கான்ஸ்டபிள் ஜெயசிங்கவுக்கு கிடைத்த தகவலையடுத்து சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லலீத்த லீலரத்தினவின் ஆலோசனைக்கமைய, பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரியந்த பண்டாரவின் வழிகாட்டலில், பொலிஸ் கன்ஸ்டபிள் ஜெயசிங்க தலைமையில் சமரபண்டு, ரதன் ஆகிய பொலிஸ் குழுவினர் நேற்று அதிகாலை 4.00 மணியளவில் நகர்பகுதி திருகோணமலை வீதியில் மாறுவேடத்தில் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இதன்போது கொழும்பில் இருந்து பஸ் ஒன்றில் பல்கலைக்கழக மாணவர் ஒருவர் இந்தப் போதை பொருளை கடத்தி கொண்டு வந்து சம்பந்தப்பட்ட வியாபரிகளிடம் வழங்கிய நிலையில் அதனை வாங்கி கொண்டு வரும்போது வீதியில் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பொலிஸார் அவர்களை சுற்றிவளைத்தனர். 23 வயதுடைய ஒருவரிடமிருந்து 3200 மில்லிக்கிராமும், 23 வயதுடைய ஒருவரிடம் 4500 மில்லிகிராமும் ஐஸ் போதை பொருளும் ஒரு இலட்சத்து 20 ஆயிரத்து 640 ரூபா பணமும், 2 கையடக்க தொலைபேசிகளும் மீட்கப்பட்டன.

இதில் கைது செய்யப்பட்டவர்கள் பூம்புகார் லயன்ஸ் கிளப் வீதி மற்றும் கருவப்பங்கேணி பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர்கள் எனவும், இவர்கள் வியாபாரத்தில் ஈடுபட்டுவந்துள்ளனர் எனவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. இவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துவருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

# அழுங்கைச் சுட்டு வேட்டையாடிய இருவர் கட்டுத்துவக்குடன் கைது!





(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை – சேருநுவர பொலிஸ் பிரிவிலுள்ள தெஹிவத்தை பகுதியில் வைத்து , சட்டவிரோத கட்டுத்துவக்கு மற்றும் துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டு வேட்டையாடப்பட்ட ஆமடில்லா (அழுங்கு) எனும் மிருகம் ஆகியவற்றுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அதிகாலை இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக சேருநுவர பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் சேருநுவர – தெஹிவத்தை பகுதியைச் சேர்ந்த 53,45 வயதுகளையுடைவர்கள் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சேருநுவர பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின்போது கட்டுத்துவக்குடனும் வேட்டையாடப்பட்ட அலுங்கு மிருகத்துடனும் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் சேருநுவர பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு மூதூர் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டனர் என சேருநுவர பொலிஸார் தெரிவித்தனர்.



# நித்யாஸ்ரீ மகாதேவனின் பக்தி சார்ந்த கர்நாடக இசைக் கச்சேரி யாழ் நகரில்

**(ஏ.எச்.ஹஸ்பர்)**

இந்திய தூதரகம் யாழ்ப்பாணத்தில் நல்லூர் கந்தசுவாமி ஆலயத் திருவிழாவை ஒட்டி நேற்றுமுன்தினம் டாக்டர் நித்யாஸ்ரீ மகாதேவனின் பக்தி சார்ந்த கர்நாடக இசைக் கச்சேரியை ஏற்பாடு செய்தது. இந்நிகழ்ச்சி, இந்திய அரசின் உதவித் தொகையால் கட்டப்பட்ட யாழ்ப்பாணத் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் நடைபெற்றது.

டாக்டர் நித்யாஸ்ரீ முருகப் பெருமானுக்கு அர்ப்பணிக்கப்பட்ட பக்திப் பாடல்களை தெய்வீகம் க்ச்மழப் பாடி, பார்வையாளர்களை மெய்மறக்கச் செய்தார். அவருடன் இந்தியாவிலிருந்து வந்த திறமையான கலைஞர்களின் இசைக் குழுவும் இணைந்து கச்சேரியில் பங்கேற்றது.

இந்த கச்சேரி நிறைந்த பார்வையாளர்களின் முன்னிலையில் நடைபெற்றது. நல்லூர் கந்தசுவாமி ஆலயத் திருவிழா காலத்தில் நிலவிய ஆன்மீகச் சூழலுடன் ஒத்திசைந்த இந்நிகழ்ச்சி, அனைவரின் உள்ளங்களிலும் ஆழமான பக்தி உணர்வை எழுப்பியது.

இந்த நிகழ்ச்சி இந்திய சாஸ்திரிய இசை மற்றும் பண்பாட்டு மரபின் கொண்டாட்டமாகவும், இந்தியா மற்றும் இலங்கையின் வட மாகாணத்திற்கிடையிலான ஆன்மீக மற்றும் பண்பாட்டு பிணைப்புகளை மேலும் வலுப்படுத்துவதாகவும் அமைந்தது.












# சம்மாந்துறை பிரதேச சபையில் உறுப்பினர்கள் இடையே அமளி

## ஊடகவியலாளரை வெளியேற்றிய தவிசாளர்








**(பாறுக் ஷிஹான்)**

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பிரதேச சபை மாதாந்த கூட்டத்தில் இருந்து ஊடகவியலாளர் ஒருவர் தவிசாளரின் பணிப்பின் பேரில் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டுள்ளார்.

சம்மாந்துறை பிரதேச சபையின் 5 ஆவது சபையின் 2 ஆவது கூட்ட அமர்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர் தலைமையில் நடைபெற்றது.

அதன்போது கடந்த சபையின் கூட்டறிக்கைய சமர்ப்பித்து அதற்கான அங்கீகாரத்தை பெறுவதற்காக தவிசாளர் சபையில் கவனத்திற்கு அதனைக் கொண்டு சென்றார். இந்நிலையில் சென்ற கூட்ட அறிக்கையில் தாங்கள் பேசிய பல விடயங்கள் விடுபட்டு உள்ளன எனவும், யார், யார் என்னென்ன கருத்துக் கூறினார்கள் என்ற விடயம் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை எனவும் குறிப்பிட்டு சபையில் எதிர்கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

அதன் போது தவிசாளர் சென்ற கூட்ட அறிக்கையில் மெற்கொள்ளப்பட்ட விடயங்கள் குறித்து சபையில் தெளிவாக விளக்கியதுடன் முக்கியமான விடயங்களை மாத்திரமே கூட்டறிக்கையில் உள்வாங்கப்படுகின்றன எனக் குறிப்பிட்டார். இதனிடையே சபையில் உறுப்பினர்களிடையே அமளிதுமளி ஏற்பட்டது.

இவ்வாறு சபை உறுப்பினர்களிடையே ஏற்பட்ட வாதப்பிரதி வாதங்கள் நீண்டு செல்லாமல் இடைநிறுத்திய தவிசாளர், அங்கு விசேட அனுமதி பெற்று செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்த ஊடகவியலாளரை வெளியேற்றுமாறு பிரதேசசபைச் செயலாளர் உள்ளிட்ட உத்தியோகஸ்தர்களுக்குப் பணித்திருந்தார்.

அதனை அடுத்து கூட்டத்தில் விசேட அனுமதி பெற்று சபையில் இருந்த ஊடகவியலாளர் தன்னை ஊடகவியலாளர் என அடையாளப்படுத்தி இருந்த போதிலும், சபை அமர்வுகளில் இடைநடுவில் செய்தி சேகரிக்க அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் வெளியேற்றப்பட்டார்.

மேலும் உள்ளூராட்சி சபைகளின் மாதாந்தக் கூட்டங்களில் ஊடகங்கள் கலந்து கொள்வதற்கு ஏனைய சபைகள் அனுமதி வழங்கியுள்ள நிலையில் சம்மாந்தறை பிரதேச சபையில் மாத்திரம் ஊடகங்களுக்கு மட்டுப்பாடுடன் அனுமதி மறுக்கப்பட்டு வருகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது. இருந்த போதிலும் முன் அனுமதி பெற்று சபையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஊடகவியலாளரை அங்கிருந்து தவிசாளர் வெளியேற்றிய சம்பவத்தைத் தாங்கள் கண்டிக்கின்றனர் என தேசிய காங்கிரஸ் கட்சி பிரதேச சபை உறுப்பினர் ஏ.சி.எம். சஹீல் தனது கண்டனத்தை சபையில் குறிப்பிட்டார்.

சபையில் முன் அனுமதி பெற்று வந்த ஊடகவியலாளரை அங்கிருந்து அப்புறப்படுத்தியமை தவிசாளர் தனது தவறுகளை வெளியில் தெரியாமல் தடுக்கவே எனக் குற்றம் சாட்டப்படுகிறது.

# இன்றைய ராசி பலன்கள் - 21.08.2025




இன்று நடப்பவை அனைத்தும் சுமுகமாக இருக்கும்.உங்கள் இலக்குகள் நிறைவேறுவதைக் காண்பீர்கள்.உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.இனிமையாகப் பேசி பகிர்ந்து கொள்வதன் மூலம் மற்றவர்களை எளிதில் புரிந்து கொள்ளலாம்.

உங்கள் பணியை சிறப்பாக ஆற்றி பிரகாசிப்பீர்கள். உங்கள் திறமைகளைப் பணியில் வெளிப்படுத்துவீர்கள். குறித்த நேரத்தில் பணிகளை முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படும். உங்கள் உணர்வுகளை சிறப்பான முறையில் உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள்.உங்கள் குடும்பத்தில் நடக்கும் விசேஷம் பற்றி உங்கள் துணையுடன் விவாதிப்பீர்கள்.

எதிர்பாராத வகையில் இன்று உங்களுக்கு பணம் கிடைக்க வாய்ப்பு உள்ளது. இவ்வகையான பண வரவு உங்களுக்கு மிகுந்த திருப்தியை அளிக்கும்.




இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள் அல்ல.இன்று தைரியம் குறைந்து காணப்படும்.உங்கள் வளர்ச்சிக்காக மிகுந்த முயற்சி எடுக்க வேண்டியிருக்கும்.

நீங்கள் உங்கள் பணியில் தவறுகள் செய்ய நேரலாம்.அதன் காரணமாக உங்கள் மேல–திகாரிகளுடன் சில அசந்தர்ப்பமான சூழ்நிலைகளை சந்திக்க நேரும்.

உங்கள் துணையிடம் அன்பான உணர்வுகளை பகிர்ந்து கொள்ளமாட்டீர்கள். உங்கள் துணையிடம் உரையாடும் போது சில பிரச்சினைகள் உருவாகும்.

இன்று பண வளர்ச்சி சாதகமாக இருக்காது. இன்று ஏற்ற இறக்கங்களுடன் காணப்படும்.

இன்று தோல்சம்பந்தமான பிரச்சினைகளால் பாதிக்கப்படலாம். எண்ணெய் பாதார்த்தங்களை தவிர்ப்பது நல்லது.




இன்று சிறப்பான நாளாக அமையாது. இன்றைய நாளை திட்டமிட வேண்டும். இன்று சில சௌகரியங்களை இழக்க நேரலாம். இன்று முக்கியமான முடிவுகளை எடுக்க உகந்த நாள் அல்ல.

பணிச்சுமை அதிகமாகக் காணப்படலாம்.கூடுதல் வேலைகள் காரணமாக பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாமல் போகலாம்.

குடும்ப விஷயம் காரணமாக உங்கள் துணையுடன் சிறிய கருத்து மோதல்கள் காணப்படும். இதனால் தவறான புரிந்தணர்வு ஏற்பட நேரலாம் என்பதால் அதனை தவிர்ப்பது நல்லது.

இன்று வீணான செலவுகள் காணப்படும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு பணத்தை பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பீர்கள்.




உங்கள் இலக்குகளை முடிப்பதற்கான சாதகமான சூழ்நிலைகள் இன்று அமையாது.நீங்கள் நம்பிக்கையுடன் செயல்பட்டு உங்கள் சமயோஜித புத்தி மூலம் இன்றைய நாளில் உங்கள் இலட்சியங்களை அடைய வேண்டும்.

அதிக வேலை காரணமாக சோர்ந்து போவீர்கள். எனவே உங்கள் பணிகளை திட்டமிட்டு ஒழுங்கமைக்கவும்.அவ்வாறு செய்வதன் மூலம் நல்ல வளர்ச்சியைக் காண்பீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் நகைச்சுவையாக பேசுவதன் மூலம் நல்லிணக்கமான உறவு காணப்படும். இது நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்தும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். பணத்தை கவனமுடன் கையாள வேண்டும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான பணம் உங்களிடம் காணப்படாது.




ஷஇன்றைய நிகழ்வுகள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.உங்களுடைய பரந்த நோக்கு உங்கள் வளர்ச்சியை மேம்படுத்தும்.

பணியிடச் சூழல் சாதகமாக இருக்கும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள்.உங்கள் சக பணியாளர்களிடமிருந்து நல்ல ஆதரவு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். வெளியிடங்களுக்கு சென்று மகிழ்வீர்கள்.

இன்று பண வரவு அதிகரித்து காணப்படும். உங்களிடம் உள்ள பணம் உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். இன்று உங்களிடம் காணப்படும் ஆற்றல் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று சிறப்பான நாள். இன்று நீங்கள் உங்களைச் சுற்றி இருக்கும் வேலைகளில் மிகவும் மும்மரமாக காணப்படுவீர்கள். உங்கள் முயற்சிகளில் நற்பலன்களைப் பெற நீங்கள் இன்று புத்திசாலித்தனமாக செயல்பட வேண்டும்.

உங்கள் செயல்பாட்டின் மூலம் மறைந்திருக்கும் திறமைகள் வெளிப்படும்.அது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.உங்கள் பணிகளை ஆற்றுவதற்கு இது உதவிகரமாக இருக்கும்.

உங்கள் துணையுடன் வெளிப்படையாக உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள்.இது உங்கள் துணையுடன் நல்ல புரிந்தணர்வை ஏற்படுத்திக்கொள்ள உதவும்.

இன்று உங்கள் பொறுப்புகளை எதிர்கொள்ளும் அளவுக்கு உங்களிடம் பணம் காணப்படும்.




உங்கள் செயல்களை ஆற்றுவதில் இன்று சில தடங்கல்கள் ஏற்படும். முக்கியமானமுடிவுகள்எடுப்பதைதவிர்க்கவும். நேர்மறையான போக்கின் மூலம் நல்ல பலன்களைக் காணலாம்.

உங்கள் பணியில் தவறுகள் நேரலாம்.உங்களுக்கு சாதகமாக பலன்கள் அமைய நீங்கள் திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுவதன் மூலம் மகிழ்ச்சி கிடைக்கும். இன்று நீங்கள் உங்கள் துணையுடன் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று செலவினங்கள் அதிகமாக காணப்படும். தேவையற்ற மற்றும் வீணான செலவுகளால் மனதில் கவலை ஏற்படும்.

இன்று அசௌகரியங்கள் காணப்படும். செரிமானப் பிரச்சினைகள் ஏற்படலாம். முதுகு வலிக்கு வாய்ப்புள்ளது.




இன்றைய தினம் நற்பலன்களை அளிக்கும் வகையில் சாதகமாக அமையாது. பலன்கள் மெதுவாகக் கிடைக்கும். இன்றைய தினம் அதிகமாக எதிர்பார்க்காதீர்கள். பிரார்த்தனை மேற்கொள்வதன் மூலம் வெற்றி காணலாம்.

பணிச்சுமை அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். உங்கள் பணிகளை இன்று திட்டமிட்டு செய்ய வேண்டியது அவசியம்.

இன்று இறுக்கமான மனநிலையுடன் காணப்படுவீர்கள். இதை உங்கள் துணையிடம்வெளிப்படுத்துவீர்கள். இத்தகைய உணர்வுகளை வெளிப்படுத்துவது நல்லது.

இன்று விலைமதிப்பு மிக்க பொருள்களை பத்திரமாக பார்த்துக் கொள்ளுங்கள்.அவற்றை இழப்பதற்கான சாத்தியம் உள்ளது.பணஇழப்பிற்கான வாய்ப்பும் உள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 21.08.2025




இன்று சுமுகமான நாளாக இருக்கும். முயற்சியின் மூலம் இன்றைய நாளை சாதகமான நாளாக ஆக்கிக் கொள்ளலாம். உங்களிடம் சிறந்த உறுதி காணப்படும்.

உங்கள் முயற்சி மூலம் இன்று பணிகளை எளிதாக செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையை நட்புடன் அணுகினால் உங்கள் இருவருக்குமான நெருக்கம் அதிகரிக்கும். நிதி வளர்ச்சி சீராக காணப்படும்.இன்று கணிசமான தொகை சேமிப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும். உங்கள் ஆரோக்கியத்தில் திருப்தி அடைவீர்கள்.




இன்று சோம்பலான மனநிலையில் காணப்படுவீர்கள்.உங்கள் மனதில் தேவையற்ற குழப்பங்கள் காணப்படும்.குழப்பங்களை ஒதுக்கித் தள்ளி நம்பிக்கையுடன்செயலாற்றுவது நன்மை தரும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும்.உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் இன்று கிடைப்பது அரிது.

உங்களிடம் காணப்படும் குழப்பம் காரணமாக கசப்பான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். எனவே தவிர்ப்பது நல்லது.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்புகள் அதிகம். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.

கண்களில் பாதிப்பு ஏற்படலாம். உங்கள் கண்களில் கவனம் செலுத்த வேண்டும்.




இன்று சாதாகமான நாளாக இருப்பதை காண்பீர்கள். உங்கள் புத்திசாலித்தனத்தின் மூலம் இன்று நிறைய சாதிப்பீர்கள்.இன்று உங்கள் வளர்ச்சிக்கு உதவும் புதுமையான கருத்துக்களை கொண்டிருப்பீர்கள். அதற்கு முயற்சி எடுப்பீர்கள்.

பணியைப் பொறுத்தவரை திருப்திகரமான நிலை இருக்கும்.உங்கள்தரமான பணிகள் மேலதிகாரிகளின் நன்மதிப்பைப் பெறும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை தக்க வைத்துக் கொள்வீர்கள். இன்று சுமுகமான சூழ்நிலையும் நல்லிணக்கமும் காணப்படும்.

இன்று பணவரவு சிறப்பாக இருக்கும்.உங்கள் நிதிநிலைமை உங்களுக்கு திருப்திகரமாக இருக்கும்.




இன்று சிறப்புடன் செயலாற்ற நம்பிக்கையும் புத்துணரச்சியும் தேவை. தியானம் மற்றும் ஸ்லோகம் கேட்பதன் மூலம் இது சாத்தியம்.

பணிவளர்ச்சி சுமுகமாக இருக்காது. அதிகமான பணிகள் சவாலானதாக காணப்படும்.

உங்கள் குடும்பத்தில் இருக்கும் பிரச்சினை காரணமாக உங்களிடம் காணப்படும் அமைதியின்மையை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். உங்கள் துணையுடன் அமர்ந்து பேசி பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளுங்கள்.

நிதி நிலைமையில் ஏற்றத்தாழ்வுகள் காணப்படும். பண இழப்புக்கான வாய்ப்புகளும் அதிகம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படாது.

# கோழிகள், நாயை திருடியவர் போதை பொருளுடன் கைது





(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு நகரப் பகுதியில் வைத்தியர் ஒருவரின் பண்ணையில் கோழி மற்றும் விலை உயர்ந்த வளர்ப்பு நாய் ஒன்றை திருடிய இளைஞனான பிரபல திருடன் ஒருவனை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஐஸ் போதை பொருளுடன் தாங்கள் கைது செய்துள்ளமையுடன் திருடப்பட்ட கோழிகள் மற்றும் நாயையும் மீட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டு. தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள பகுதியில் வைத்தியர் ஒருவரின் பண்ணையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 30 கோழிகள் மற்றும் வளர்ப்பு நாய் ஒன்று திருட்டுப்போயுள்ளன எனொ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து பொலிசார் மேற்கொண்ட விசாரணையில் கருவப்பங்கேணியைச் சேர்ந்த இளைஞனான பிரபல திருடனை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை 2,700 மில்லிக்கிராம் ஐஸ் போதை பொருளுடன் கைது செய்தனர்.

இதனை தொடர்ந்து வைத்தியரின் பண்ணையில் திருடப்பட்ட 30 கோழிகளில் சிலவற்றையும் நாயையும் பொலிஸார் மீட்டனர். இந்த இளைஞர் நீண்டகாலமாக பல திருட்டு சம்பவங்கள் தொடர்பாகக் கைது செய்யப்பட்டு நீதிமன்றப் பிணையில் வெளிவந்தவர் எனவும், போதை பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வருபவர் எனவும் தெரிவித்த பொலிஸார், இவரை 3 நாள்கள் பொலிஸ் காவலில் தடுத்து வைத்து விசாரணை செய்ய நீதிமன்ற அனுமதியை பெறுவதற்கான நடவடிக்கையை முன்னெடுத்துவருகின்றனர் எனவும் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.